# ஆண்டாள் பாசுரங்களில் இறை நிலைகள்

ந. கௌசல்யா
முனைவர்பட்ட ஆய்வாளர், மெய்யியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

நமது பாரத நாடு பழம்பெரும் தேசம்; பல சமயங்களுக்குப் பிறப்பிடம். தமிழகத்தில் சங்க காலத்தில் நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரிக்கப்பட்டு, அதன் பண்புகள், வழிபாடுகள் வகுக்கப்பட்டு, பின்னர் வேதக் கலாச்சாரத்துடன், ஆகம வழி கலாச்சாரத்துடனும் கலந்து தமிழகம் அகண்ட பாரதத்தின் கலாச்சார சிகரமாக வளர்ச்சி பெற்று திகழ்ந்தது.

சங்க காலத்திற்குப் பின்னர் வடநாட்டிலிருந்து தெற்கு பரவியது ஜைன, பௌத்த சமயங்கள். ஆனால், நடைமுறை வாழ்க்கைக்கு அவை அப்பாற்பட்டதாயும், கடும் நோன்புகளைக் கொண்டதாலும் காலப்போக்கில் மக்களிடையே தளர்வடைய துவங்கின. இந்நிலையில் தான், பக்தி இலக்கியக் காலம் புத்துயிர் பெற்றது. திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வைணவத்தை ஆழ்வார்களும், சிவபெருமானை பரம்பொருளாகக் கொண்டு நாயன்மார்களும் பக்தி பரவசமான பாடல்களைப் பாடி வைணவத்தையும், சைவத்தையும் வீறு பெறச்செய்தனர். திருமாலின் கல்யாண குணங்களில் ஆழங்கால்பட்டவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் ஒத்த கருத்துடைய பன்னிரெண்டு பேர் ஆவர். அவர்களுள் ஆண்டாள் ஒருவர் மட்டுமே பெண் அடியார்.

பூமாலையும், பாமாலையும் மாமாலுக்கு சூடிக்கொடுத்த சுடர்கொடி ஆண்டாள். இவள் தனிமகளாய் ஞானச்சுடர் விளக்காய் பிரகாசிப்பவள்.

'தேக நலத்தில் சிரத்தையுடைய சாதாரண மனிதர்களை விட ஆத்ம சொரூபம் அறிந்த ரி´கள் பல மடங்கு உயர்ந்தவர்கள். ரி´களை விட, ஆழ்வார்கள் பன்மடங்கு உயர்ந்தவர்கள். மற்றைய ஆழ்வார்களைவிடப் பெரியாழ்வார் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர்; அந்த பெரியாழ்வாரை விட, அவர் வளர்ப்பு மகளாம் ஆண்டாள் அநேக மடங்கு உயர்ந்தவள்' என்று வியாக்கியானச் சக்கரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை விளம்புகிறார். அது மட்டுமல்லாது, எத்தனை மடங்கு உயர்ந்தவர் என்பதையும் 'பர்வதப்பரமானு வோட்டை வாசிப்போரும்' ஆண்டாள் மலை; மற்றவர் அவள் முன் தூசி' 1 என்கிறார். இவ்வாறு மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் ஆண்டாளுக்கு ஏன் ஏற்றம் என்பதற்கு காரணம் உண்டு.

எம்பெருமானுக்கு யாரால், எம்பொழுது, என்ன தீங்கு நேருமோ? என அஞ்சி என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் அவனுக்குப் பல்லாண்டு பாடிய பெரியாழ்வார்க்கு இவர் ஒரே மகள். மேலும் ஆழ்வார் பதின்மர்க்கும் ஒரே மகளாய் தோன்றியமையால், இவருக்கு ஆழ்வார்கள் அனைவரின் ஞானபக்தி வைராக்கியங்கள் வந்து சேர்ந்ததோடு, அவர்கள் பக்திவேறு, தாங்கள் வேறு என்று நின்றது போலல்லாமல், பக்தியையும், ஆண்டாளையும் பிரிப்பதற்கு இயலாத நிலையில் பக்தி மயமாகவே நிலை நிற்பவர் ஆண்டாள். இக்கருத்தை உபதேச ரத்தின மாலை பாடல்,

' 'அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் '2

தெளிவுபடுத்துகிறது. ஆண்டாளின் பெருமை அளவு கடந்தது. இறைவனுக்கே பணிபூண்ட ஆழ்வாராய் பாமாலை சூட்டியும், இறைவனின் தேவியாய் பூமாலை சூடியும் அனுபவித்த தனி அனுபவம் ஆண்டாளுக்கு மட்டுமே உரியது. ஆழ்வார்கள் அனைவரது தீந்தமிழ் திவ்வியப்பிரபந்தங்கள் யாவுமே சகல வேத சாரங்களாய் மிளிரா நிற்கும் நிலையார் பாடல்கள். அத்திவ்வியப்பிரபந்தங்கள் அனைத்திலும் தன்னிகரற்ற பேரொளியைப் பரப்பிச் சுடர்விடும் வைரமாய் திகழ்வது ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை.இத்திருப்பாவை வேதத்திற்கே 'வித்து' எனப் போற்றப்படுகிறது. நாயகா ‡ நாயகி பாவனையில் அமைந்த ஆண்டாளின் மற்றொரு பிரபந்தம் 'நாச்சியார் திருமொழி' .வைணவத்தில் ஞானம் ஐந்தாகப் பேசப்படுகிறது. அவை விஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தம், ஸீவரூபம், உபாய ஸீவரூபம், விரோதி ஸ்வரூபம் என்பன. இவற்றுள் பரஸ்வரூபம் இறைநிலை பற்றியதாகும். இவ்விறை நிலையை

பரத்துவம் - விண்ணாட்டு நிலை
வியூகம் - அணிவகுப்பு நிலை
விபவம் - பிறப்பு நிலை
அந்தர்யாமித்துவம் - உள்ளுறை நிலை
அர்ச்சை - வழிபடும் நிலை (எம்பெருமான் உலகில் கோயில் கொண்ட நிலை) என ஐந்துவகைகளாக பாகுபடுத்தி உள்ளார்கள். இந்த இறைவனின் ஐந்து நிலைகள் ஆண்டாள் பாசுரங்களில் அமைந்திருக்கும் நிலையை இக்கட்டுரையின் வழி காணலாம்.

பரம்பரத்துவம் - இது இறைவன் வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையை குறிக்கும். இது செயற்கை கடந்த நிலை. ஒருநாளும் அழிவில்லாத நிலை; ஒளிமயமான நிலை. துயரச்சுவடறியாத நிலை. அங்கு எம்பெருமான் பெரிய பிராட்டியாரோடு வீற்றிருக்கிறான். இது நித்யவிபூதி எனப்படும் பரமபதத்தில், நித்யமுக்தர்களுக்குத் தலைவனாய் வீற்றிருக்க, உலக வாழ்வினின்று வீடுபெற்ற முக்தர்கள் அளவற்ற ஆனந்தம் அனுபவிக்கும் இடம்.

ஆண்டாள் திருப்பாவையின் முதல் பாசுரத்திலேயே எம்பெருமானின் பரத்துவ நிலையைப் பாடுகிறார். 'கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நாராயணன்' 3, 'ஊழி எல்லாம் ஊர்வானே' 4, என்றும், இவை தவிர திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் எம்பெருமானின் பரத்துவம் பற்றி பல இடங்களில் ஆண்டாள் அருளியுள்ளார்.

### வியூகம்

வியூகம் இறைவன் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலை. உயிர்களை படைத்துக்காத்து, உலகோர் வேண்டியவற்றை ஈந்து வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தருளவும் வீடுபேறு வேண்டுவோர்களுக்கு தடைகளை அகற்றி அவர்கள் தன்னை வந்தடையுமாறு செய்யவும் அமைந்த நிலையாகும். ஆண்டாள், இந்நிலையை 'பாற்கடலுள் பையத் துயின்ற பரமனடிபாடி' 5,"பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானை' 6 என்று இறைவனின் வியூகநிலையை வர்ணிக்கிறார்.

### விபவம்

இறைவன், தேவர், மனிதன், விலங்கு, தாவரம் முதலிய உருவத்தை தன் விருப்பத்தால் ஏற்றுக்கொண்டு அவதாரமெடுத்து இவ்வுலகில் பல உருவங்கள் தாங்கி 'எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய்' என்று ஆழ்வார்கள் வியந்து போற்றும்படியாக எம்பெருமான் பிறப்பது அதாவது, அவதாரம் எடுப்பது விபவம் எனப்படும். ஆண்டாள் திருப்பாவையிலும், நாச்சியார் திருமொழியிலும் எம்பெருமான் எடுத்த பல அவதாரங்களை மேற்கோள் காட்டி நாராயணனே பறைதருவான் என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறாள். இனி ஆண்டாளால் பாடப்பெற்ற அவதாரங்களை காண்போம்.

### கூர்மாவதாரம்

'வங்கக்கடல் கடைந்த மாதவனைக்கேசவனை7,
'சங்கமா கடல் கடைந்தான்' 8
மந்திரம் நாட்டின் அன்று மதுரக்கொழுஞ்சாறு,
கொண்ட சுந்திரத் தோளுடையான்' 9
'கடலே கடலே உன்னை கடைந்து கலக்கு உறுத்து'
உடலுள் புகுந்து நின்று ஊறல் அறுத்தவற்கு என்னையும்10 என்று கூர்மாவதார சிறப்பையும், உட்கருத்தையும் ஆண்டாள் அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

### வராஹ அவதாரம்

வராஹ அவதாரத்தின் சிறப்பு, எம்பெருமான் உலகை தன் மூக்கு நுனியில் ஒரு தூசிபோல் தூக்கினான். இதனை ஆண்டாள் நாச்சியார் திருமொழியில்
'பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டு ஒருநாள்
மாசு உடம்பில் நீர் வாரா மானம் இலாப் பன்றிஆம்
என்று அருளிச்செய்கிறாள்' 11
இங்கு மானமிலா, என்றால் அளவில்லாத, அதாவது எவ்வளவு பெருமையுடையது என்று நிர்ணயிக்க முடியாதது என்று பொருள் கொள்ள வேண்டும்.

### நரசிம்மாவதாரம்

'மாரி மலைமுழைஞ்சில் மன்னிக்கிடத்துறங்கும்' 12'
'கோளரி மாதவன் கோவிந்தன் என்பான்
ஓர் காளை புகுதக் கனாக் கண்டேன், தோழி ! நான்' 13
'அரிமுகன் அச்சுதன் என்கைமேல் கைவைத்து,
பொரிமுகந்து தட்டக் கனாக் கண்டேன்' 14
'ஊன் கொண்ட வள்-உகிரால் இரணியனை உடல் இடந்தான்
தான் கொண்ட சரி-வளைகள் தருமாகில் சாற்றுமினே' மீ15
என்று நரசிம்மரை வர்ணித்து மகிழ்கிறாள்.

### வாமனாவதாரம்

வாமனஅவதாரம் பற்றி திருப்பாவையிலும், நாச்சியார் திருமொழியில் பல இடங்களிலும் ஆண்டாள் பாடியுள்ளார். குறிப்பாக திருப்பாவை ஒரு மஹா யஜ்ஞம். இந்த யஜ்ஞத்தில் விஷ்ணுவிற்கு ஹவிசை சேர்க்க மூன்று கபாலங்கள் ‡ பாத்திரங்கள் உண்டு என்பர். ஒவ்வொருமுறை சமர்ப்பிக்கும் போது திரிவிக்ரமனை தியானம் செய்வது மரபு. அதன்படி ஆண்டாளின் முதல் 10 பாசுரங்கள் ஒரு கபாலம்.அதில் தன்னுடைய ஆத்மாவை வைக்கிறாள்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி16-1-வது கபாலம்
'அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகளந்த' 17-2-வது கபாலம்
'அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி' 18-3-வது கபாலம்

இப்படியாக ஆத்ம சமர்ப்பணம் என்ற மஹா யஜ்ஞனத்தை ஆண்டாள் சுட்டிக்காட்டுகிறாள்.கிருஷ்ணனை 'மாயன்' என்று சொல்வதைப்போல் வாமனனையும் மாயன் என்று சொல்வதுண்டு.

'மாயா வாமனனே மதுசூதா நீயருள்வாய்' 19'

இந்த மாயத் தன்மையாலேயே மூவுலகளந்த திரிவிக்கிரமனாய் விஸ்வரூபமெடுக்கிறார். இந்த உலகளந்தான் மேல் ஆண்டாளுக்கு ஆதீத காதல். 'உலகளந்தான்' என்ற சொல்லை ஆண்டாள் தன் பாசுரங்களில் அதிகம் பிரயோகிப்பதைக் காணலாம். இதனை எம்பெருமானுக்கு அவள் இட்ட செல்லப்பெயர் என்று கூட சொல்லலாம். இந்த உலகளந்தனை பற்றி

'கூட்டிலிருந்த கிளி... உலகளந்தான் என்று உயரக் கூவும்' ,20

'விண் உறநீண்டு அளந்து கொண்டாய்' ,21

'அன்று உலகம் அளந்தனை உகந்து' ,22

'எல்லா உலகும் அளந்து கொண்ட எம்பெருமான்' ,23

'உலகளந்தான் வரக் கூவாய்' ,24

மாணி உருவாய் உலகு அளந்த' 25 என்று உலகளந்தான் பெருமையை பல இடங்களில் பாடியுள்ளார் கோதையார்.

ராமாவதாரம்

கோதை ராமனின் வீரத்தையும், குணநலத்தையும் தனது பாசுரங்களில் அழகாகக் காட்டியுள்ளார். தனது அடியாரான ஆஞ்சநேயர் மேல் ராவணன் காயம் ஏற்படுத்தியவுடன் கருணா மூர்த்தியான இராமபிரான் கோபம் கொண்டாராம். வில்லை எடுத்து அம்புமாரி பொழிந்து துவம்சம் செய்தாராம்.

'வில்லால் இலங்கை அழித்தாய்' 27

'அதன் தலைவனாம்' இராவணன் மேல் சரமாரி
தாய் தலை அற்று வீழத் தொடுத்தான்' 28

'கிள்ளிக் கிளந்தானை கீர்த்தியமைப்பாடிப்போய்' 29

'இரக்கமேல் ஒன்று இலாதாய் இலங்கை அழித்த பிரானே' 30 என்று பொரிந்து தள்ளுகிறாள்.

மேலும் இராமனை

'மனத்துக் கினியானைப் பாடவும் நீவாய் திறவாய்' 31'சீதை வாயமுதம் உண்டவனே' 32 என்று வர்ணிக்கிறார்.

பலராம அவதாரம்

'பலதேவரை ஆண்டாள்

'செம்பொற் கழலடி செல்வா பலதோ' 33

'பண் அழியப் பலதேவன் வென்ற' 34

'பட்டி மேய்ந்து ஓர் காரேறு35

பல தேவர்க்கு ஓர் கீழ்க்-கன்றாய்' 36 என்று கூறி, இங்கு கிருஷ்ணனை பலராமனுக்கு ஒப்பற்ற தம்பி என்று கூறி பலராமனின் ஏற்றத்தை வெளிப்படுத்துகிறார்.

கிருஷ்ணாவதாரம்

திருப்பாவை, நாச்சியார் திருமொழி, இரண்டும் கிருஷ்ணனை ஆதாரமாகக் கொண்டது. கிருஷ்ணனைப்பற்றிய செய்தியோ, வர்ணனையோ இல்லாத பாசுரங்கள் சொற்பம். ஆகவே பிறப்பு முதல் - கம்சவதம் வரை கிருஷ்ண காவிய தொகுப்பையே திருப்பாவையிலும், நாச்சியார் திருமொழியிலும் உள்ள ஆண்டாள் வாக்கியங்களால் வரையலாம்.

'தேவகி மா மகன் மிகுசீர் வசுதேவர் தம்கோமகன்37

'ஒருத்திமகனாய் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்38

'கண்ணன், நந்தகோபன் குமரன்39, யசோதை இளஞ்சிங்கம்40'

'ஆயர் குலத்தில் தோன்றும்அணிவிளக்கு41, பேய் முலை நஞ்சுண்டு42,

'கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி43 குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற44

'நந்தகோபாலன் கடைத்தலைக்கே45 தாயை குடல் விளக்கம் செய்த தாமோதரனை46

'கற்றினம் மேய்க்கவும் மேய்க்கப் பெற்றான்47,'

மாவாய்பிளந்தானைக்48,'

'காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளும் உடன் மடிய வேட்டையாடி வருவானை49,''

'நீர்க்கரை நின்ற கடம்பை ஏறிக், காசயன் உச்சியில் நட்டம் பாய்ந்து50,'

'குதிகொண்டு அரவில் நடித்தாய்51, கன்று குடையால் எடுத்தாய்52,'

'மல்லரை மாட்டிய53, மாயன் மணிவண்ணன்54

'கஞ்சைக் காய்ந்த கருவில்லி கடைக்கண்55, செற்றவன் திகழும் மதுரைப்பதி கொற்றவன்56,

'சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரொம்பாவாய்57

என்று கிருஷ்ணாவதாரத்தையும், எம்பெருமானின் எல்லா அம்சங்களையும், அவனது பல அவதாரங்களையும் கீர்த்திக்களையும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி இரண்டிலும் அழகாக மேற்கோள் காட்டி உணர்த்தியுள்ளார் ஆண்டாள் நாச்சியார்.

அந்தர்யாமி

ஆன்மாக்களின் உள்ளே தங்கியிருக்கும் நிலையிது. இருவினைகளால் பிறப்புப்பெறும் எல்லா உயிர்களுக்கும் உள்ளே பிரியாமல் துணையாய் இருப்பது அந்தர்யாமி தத்துவம்.

'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகுந்து கொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து' 57

இப்பாடலில் மழையையே பகவானாக வர்ணிப்பதையும், உயிர்களின் ஊடாக மறைந்திருப்பதும், காப்பதும், மேலும் அதுபோல இறைவன் 'தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் எனும் கூற்றுக்கிணங்க எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். உட்கலந்திருத்தல் என்ற அந்தர்யாமி

ஸ்வரூபமாக இருப்பான் என்பதனை ஆண்டாள் அறிவுறுத்திருக்கிறாள்.

### அச்சாவதாரம்

இறைவன் அவதாரம் எடுத்த போது அவனை காண முடியாத அடியவர்களுக்கு, கண்ணால் கண்டு கையால் தொழுது வணங்கி வழிபட்டு நாவால் வாழ்த்தி, தம் புலன்களால் அனுபவிப்பதற்கேற்ற அழகு வடிவமாக ஆலயங்களில் காட்சி அளிக்கும் மூர்த்திகளின் சிலை வடிவ நிலையே அச்சாவதாரம் எனப்படுகிறது.

'மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்மீ58 - என்று தொடங்கும் திருப்பாவை பாசுரத்தில் ஆண்டாள் 'வடமதுரை மைந்தன்' என்று வடமதுரையில் சிலாரூபமாக உள்ள பகவானை' அர்ச்சாவதார மூர்த்தியை குறிப்பிடுகிறார்.

### முடிவுரை

ஞானப்பூங்கொடி ஆண்டாள், இறையருளால் இசைத்த பாசுரங்கள் வழி இறைவனின் ஐந்து நிலைகளைக் கண்டோம். ஆண்டாள் ஊனக் கண்ணால் இறையின் ஐந்து நிலையினையும், இறை வீற்றிருக்கும் மூர்த்தங்களைக் கண்டு, ஞானக்கண் கொண்டு. அவற்றை இறைவலிமையாலே இன்பமயமாக்கி, இறுதியில் இறைவனுக்கே இன்பக் களிப்பூட்டும் வண்ணம் அமைந்திருப்பதை நாம் கண்டு, உணர்ந்து, போற்றி, புகழ முடிகிறது, அவள் அருளிய பாசுரங்களால். அதுவே நமக்கு ஆண்டாள் கொடுத்த¬¬¬ மாநீதி, கொடி என்று கொண்டாடி மகிழலாம்.

### அடிகுறிப்பு

a. மணவாள மாமுனிகளின ரத்தின மாலை பா:34
b. பழம்பெரும் வைணவ பாடல்.
c. திருப்பாவை பா:1,
d. நாச்சியார் திருமொழி 3:7,
e. திருப்பாவை பா:3,
f. நாச்சியார் திருமொழி 7:8,
g. திருப்பாவை பா:5,
h. நாச்சியார் திருமொழி: 8:7,
i. நாச்சியார் திருமொழி 10:1,
j. நாச்சியார் திருமொழி: 10:9,
k. நாச்சியார் திருமொழி: 11:8,
l. திருப்பாவை: 23,
m. நாச்சியார் திருமொழி: 6:2,
n. நாச்சியார் திருமொழி: 6:9,
o. நாச்சியார் திருமொழி: 8:5,
p. திருப்பாவை: 3,
q. திருப்பாவை: 17,
r. திருப்பாவை: 24,
s. நாச்சியார் திருமொழி:????,
t. நாச்சியார் திருமொழி: 12:9,
u. நாச்சியார் திருமொழி: 2:10,
v. நாச்சியார் திருமொழி: 5:10,
w. நாச்சியார் திருமொழி: 11:5,
x. நாச்சியார் திருமொழி: 5:5,
y. நாச்சியார் திருமொழி: 12:2,
z. திருப்பாவை: 12,
aa. நாச்சியார் திருமொழி: 3:3,
bb. நாச்சியார் திருமொழி: 5:3,
cc. திருப்பாவை: 13,
dd. நாச்சியார் திருமொழி: 3:4,
ee. திருப்பாவை: 12,
ff. நாச்சியார் திருமொழி: 2:11,
gg. திருப்பாவை: 17,
hh. நாச்சியார் திருமொழி: 12:7,
ii. நாச்சியார் திருமொழி: 14:1,
jj. நாச்சியார் திருமொழி: 4:3,
37 ) திருப்பாவை: 25,
kk. திருப்பாவை: 1,
ll. திருப்பாவை:1,
mm. திருப்பாவை: 5,
nn. திருப்பாவை: 6,
oo. திருப்பாவை: 6,
pp. நாச்சியார் திருமொழி: ?????
qq. நாச்சியார் திருமொழி: 12:3,
rr. திருப்பாவை: 5,
ss. நாச்சியார் திருமொழி:???? ,
tt. திருப்பாவை: 8,
uu. நாச்சியார் திருமொழி: 14:9,
vv. நாச்சியார் திருமொழி: 12:5,
ww. நாச்சியார் திருமொழி: 3:2,
xx. திருப்பாவை: 24,
yy. திருப்பாவை: 8,
zz. திருப்பாவை: 16,
aaa. நாச்சியார் திருமொழி: 13:3,
bbb. நாச்சியார் திருமொழி: 4:6,
ccc. திருப்பாவை: 14,
ddd. திருப்பாவை: 2,
eee. திருப்பாவை: 5.